கூடலூர் பகுதியிலுள்ள அரசு தேயிலைத் தோட்டங்கள்.

*வினா எண் 160—திரு. கே. உச்சி : மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நீலகிரி மாவட்டம் கூடலூர் பகுதியிலுள்ள அரசு தேயிலைத் தோட்டங்களில் ஒவ்வொரு பிரிவு வேலையும் காண்ட்ராக்ட் முறையில் கொடுப்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், புதிய தொழிலாளர்களை அங்கு வேலைக்கு சேர்க்க எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) கட்டிடம் கட்டுதல், ரோடு போடுதல், பாலம் கட்டுதல், பாலிதின் பைகள் ஷிட்டுகள் தயாரித்தளித்தல் போன்ற வேலைகள் மட்டுமே காண்ட்ராக்ட் முறையில் செய்யப்படுகின்றன.

(ஆ) நுட்பத் திறமை தேவையில்லாத காண்ட்ராக்ட் முறையில் செய்யப்படும் இதர வேலைகளுக்கு இலங்கை அகதிகள் நியமனம் செய்யப்படுகின்றனர். கொத்தன், தச்சு போன்ற திறமையுள்ள வேலைகளுக்கு வெளியாட்கள் நியமிக்கப்படுகின்றனர்.

திரு. கே. உச்சி : தலைவரவர்களே, அமைச்சர் சொல்வதில் இருந்து அங்கே தேயிலைத் தோட்டங்களில் சில வேலைகள் கான்ட்ராக்ட் முறையில் கொடுக்கப்படுவதில்லையென்ற அளவு தெரிகிறது. ஆனால், எனக்குத் தெரிந்த அளவில் அரசு தேயிலைத் தோட்டங்களில் ஏராளமான வேலைகள் காண்ட்ராக்ட் முறையில் கொடுக்கப்படுகிறது, அதை அரசு அறியுமா? அப்படி இருந்தால் அதை நிறுத்தி, கான்ட்ராக்ட் முறையில் ஏழைகளுக்கு வேலை வாய்ப்பு இல்லையென்ற காரணத்தாலும், அவர்கள் அதிக நேரம் வேலை செய்து குறைந்த ஊதியம் பெறுகின்ற காரணத்தாலும் அதை நீக்க அரசு முன் வருமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, கான்ட்ராக்ட் முறையில் வேலைகள் விடப்படுகின்ற பட்டியலையே நான் தந்திருக்கிறேன். அது தவிர, நேரடியாக விடப்படுகின்ற, வேலைகள் பட்டியலையும் தந்திருக்கிறேன். ஆகவே, எந்த எந்த வேலைகள் கான்ட்ராக்ட் முறையில் விடப்பட வேண்டிய அவசியம் இருக்கிறதோ அந்த வேலைகள் மாத்திரம் கான்ட்ராக்ட் முறையில் அளிக்கப்படுகின்றன. நுட்பத் திறமை தேவையில்லாத கான்ட்ராக்ட் முறையில் செய்யப்படும் இதர வேலைகளுக்கு இலங்கையிலேயிருந்து வந்திருக்கிற அகதிகளும் மற்றவைகளுக்கு மற்றவர்களும் நியமிக்கப்பட வேண்டுமென்ற நிபந்தனையின்படி கான்ட்ராக்ட் அளிக்கப்படுகிறது என்றும் தெரிவித்திருக்கிறேன்